சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை-8

ந.க.எண்:-7401/அ5/22 நாள்:-21.04.2023

பொருள்:- பள்ளிக்கல்வி -சென்னை மாவட்டம் 2022-23ஆம் கல்வி ஆண்டு 6, 7, 8 மற்றும் 9 ஆம் வகுப்புகளுக்கு தேர்வு முடிவுகள் – தேர்வுக் குழு அமைத்தல் - தேர்வு முடிவுகள், தேர்ச்சி பட்டியலில் மேலொப்பம் - தேர்ச்சி முடிவுகள் வெளியிடுதல் சார்பாக

------

மேற்காண் பொருள் சார்பாக 6,7,8 மற்றும் 9ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியிட கீழ்க்காணும் நெறிமுறைகளை பின்பற்றுமாறு அரசு/அரசு உதவி பெறும் / சென்னை / மெட்ரிகுலேஷன் / ஆங்கிலோ இந்தியன் / ஆதி திராவிடர் நலத்துறை / சிறப்பு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள்/ முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6 மற்றும் 7ஆம் வகுப்புகளுக்கு தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு(CCE) முறையின்படி ஒருங்கிணைந்த பதிவேட்டில் மூன்று பருவத் தேர்வுகளுக்குரிய மதிப்பெண்கள் மற்றும் கிரேடுகளை பதிவு செய்ய வேண்டும்.

8 மற்றும் 9ஆம் வகுப்புகளுக்கு முழு ஆண்டுத் தேர்வு மதிப்பெண்களை பதிவு செய்ய வேண்டும். பள்ளித் தேர்வுக்குழு தேர்ச்சி விதிகளைப் பின்பற்றி தேர்ச்சி அளிக்க வேண்டும்.

மாணவர்களின் இடை நிற்றலை தவிர்க்கும் பொருட்டு 9ஆம் வகுப்பிற்கான தேர்ச்சி விதிகள், ஆசிரியர் தேர்வு குழுவின் ஒப்புதலுடன் முடிவு செய்யப்பட்டு தேர்ச்சி அளிக்கப்பட வேண்டும். தேர்ச்சி அளிப்பதில் நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்கு அப்பால் தேர்ச்சி வழங்கப்படுமானால் அதற்கு முதன்மைக் கல்வி அலுவலரின் சிறப்பு அனுமதி பெறவேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

அரசு / அரசு உதவி பெறும்/ சென்னை/ ஆதிதிராவிடர்/ சமூக நலத்துறை / மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளின் 6,7,8 மற்றும் 9ஆம் வகுப்புகளுக்கான தேர்ச்சியினை மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்ற பிறகே வெளியிட வேண்டும்.

பள்ளிகளின் தேர்ச்சியினை ஒருங்கிணைந்த மதிப்பெண் பதிவேட்டுடன் மதிப்பெண்(T Sheet) பட்டியல் 3 நகல்களுடன் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட சரிபார்க்கும் மையங்களுக்குச் சென்று அங்குள்ள குழுக்களின் மூலம் சரிபார்க்கப்பட்டு மேலொப்பம் பெற்று சார்ந்த மாவட்ட கல்வி அலுவலரின் ஒப்புதல் பெற்ற பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்பட வேண்டும். மேலும் தேர்ச்சிப் பட்டியலின் ஒரு நகலை முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்புமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தேர்ச்சி முடிவுகள் அறிவித்தல்**

6, 7, 8 மற்றும் 9ஆம் வகுப்பு தேர்வு முடிவுகளை நெறிமுறைகளை பின்பற்றி சார்ந்த ஆய்வு அலுவலர்களின் ஒப்புதல் பெற்ற பின்னரே 05.05.2023ஆம் தேதி வெளியிட வேண்டும்.

| வகுப்பு | தேர்வு முடிவு வெளியிடப்படும் நாள் |
|---|---|
| 6,7,8 மற்றும் 9ஆம் வகுப்புகள் | 05.05.2023 |

இணைப்பு:-SCHOOL ALLOTMENT WITH DATE (EXCEL FILE)

ஓம்/-

முதன்மை கல்வி அலுவலர்

சென்னை-08

தேர்வு அமைப்பாளர்

மாவட்டத் தேர்வுக்குழு, சென்னை

<u>பெறுநர்</u>:-

தலைமை ஆசிரியர்கள் /முதல்வர்கள்

அரசு/அரசு உதவி பெறும் / சென்னை / மெட்ரிகுலேஷன் / ஆங்கிலோ இந்தியன் / ஆதி திராவிடர் நலத்துறை / சிறப்பு பள்ளிகள்.

<u>நகல்</u>:-

1. ஆணையர், பள்ளிக்கல்வி ஆணையரகம், சென்னை-6 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது
2. துணை ஆணையர்(கல்வி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. இணை இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. கல்வி அலுவலர் - சென்னை மாநகராட்சி, சென்னை-3
5. அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்